சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. **302 / 2017**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **எ.ம.சா.2**-வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி..A.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி **24.02.2026**ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : உதயசூரியன் | கிராமம் : |
| த/பெ : | வட்டம் : |
| மதம் : | தொழில்: |
| ஜாதி : | வயது : |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் இரண்டாவது எதிர்மனுதாரர் நிறுவனத்தின் சாட்சி ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) பாலிசி காப்பி - எ.ம.சா.ஆ.4

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். TN 45 BF 1839 என்கின்ற பதிவெண் கொண்ட வாகனம் சரக்கு ஏற்றும் வாகனம். மேற்படி வாகனத்தில் விபத்து சமயத்தில் வாழைக்காய் லோடு ஏற்றப்பட்டு வந்ததா என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்தில் இரண்டு நபர்கள் பயணம் செய்யலாம் என்றால் மேற்படி இரண்டு நபர்கள் யாராக இருக்கவேண்டும் என்றால் சம்பளம் பெறுகின்ற ஓட்டுநர், கிளினராக இருக்கவேண்டும். மேற்படி கிளினர் கூடுதல் ஓட்டுநராக கூட இருக்கலாம். விபத்து சமயத்தில் மேற்படி வாகனத்தில் இரண்டு நபர்கள் தான் பயணம் செய்தார்கள் என்றால் இரண்டுபேர் பயணம் செய்தார்கள் ஆனால் அதில் ஒருவர் ஓசி பயணி. மேற்படி வாகனத்தை ஒரு நபர் ஓட்டினார். உடன் பயணம் செய்த வினோத்குமார் என்பவரை நாங்கள் ஓசி பயணி என்று கூறுகிறோம். மேற்படி வாகனத்தில் பயணித்த வினோத்குமார் மேற்படி வாகனத்தில் வைக்கப்பட்டியிருந்தாக கூறக்கூடிய சரக்கான வாழைக்காய் லோட்டின் உரிமையாளர் என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி வாகனத்தின்ஓட்டுநரான அறிவழகன் இறந்ததற்காக நாமக்கல் தொழிலாளர் நீதிமன்றத்தில் இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்து அதில் நாங்கள் இழப்பீடு செலுத்தியுள்ளோம் என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் சொல்லமுடியும். நாங்கள் மேற்படி நீதிமன்றத்தில் இழப்பீடு

செலுத்தியுள்ளோம் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி வாகனத்தின் ஓட்டுநரான அறிவழகனுக்கு முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றாலும், இழப்பீடு கொடுப்பதில் இருந்து தப்பிப்பதற்காக ஓட்டுநர் உரிமம் இல்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்தில் பயணம் செய்த மற்றொரு நபர் வாகனத்தின் ஓட்டுநரா, வாகனத்தின் உரிமையாளரா அல்லது கிளினரா என்கின்ற சங்கதி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆவணங்களின் அடிப்படையில் தெரியும். மேற்படி இறந்துபோன வினோத்குமார் ஓசி பயணி. மேற்படி வாகனத்திற்கான காப்பீடு முழுமையாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகனத்திற்கு முழுமையான காப்பீடு உள்ளதாலும், இறந்துபோன வினோத்குமாருக்கு நாங்கள் தான் காப்பீடு கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல.

நான்காவது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

TN 45 BF 1839 என்கின்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் ஓட்டுநர் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் இறந்துவிட்டார் என்பதற்காக தான் மேற்படி வழக்கினை புலன் விசாரணை அதிகாரி இறுதி அறிக்கையில் (charge abetted) என முடித்துள்ளார் என்றால் சரிதான். மனுதாரர்களுக்கு நாங்கள் தான் இழப்பீடு கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. நான்காவது எதிர்மனுதாரரை பொறுத்து மனுவானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கைெயழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.02.24 14:14:57 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.